**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________

   (Name) ____________________

2. (Signature) ____________________

   (Name) ____________________

**Answer Sheet No. :** ..............................................

(To be filled by the Candidate)

**Roll No.** | | | | | | | | |

(In figures as per admission card)

**Roll No.** ____________________

(In words)

**Test Booklet No.**

**J—2605**

**PAPER—II**

# TAMIL

**Time : 1¼ hours]** **[Maximum Marks : 100**

Number of Pages in this Booklet : **12** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the question booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Serial No. of the booklet should be entered in the Answer-sheets and the Serial No. of Answer Sheet should be entered on this Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the oval as indicated below on the correct response against each item.

   **Example :** (A) (B) ● (D)

   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the Answer Sheet given **inside the Paper I booklet only**. If you mark at any place other than in the ovals in the Answer Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your name or put any mark on any part of the test booklet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is NO negative marking.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका की क्रम संख्या उत्तर-पत्रक पर अंकित करें और उत्तर-पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं। आपको सही उत्तर के दीर्घवृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।

   **उदाहरण :** (A) (B) ● (D)

   जबकि (C) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये** उत्तर-पत्रक पर ही अंकित करने हैं। यदि आप उत्तर पत्रक पर दिये गये दीर्घवृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिन्हांकित करते है, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप उत्तर-पुस्तिका पर अपना नाम या ऐसा कोई भी निशान जिससे आपकी पहचान हो सके, किसी भी भाग पर दर्शाते या अंकित करते हैं तो परीक्षा के लिये अयोग्य घोषित कर दिये जायेंगे।
9. आपको परीक्षा समाप्त होने पर उत्तर-पुस्तिका निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पैन का ही इस्तेमाल करें।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तर के लिए अंक नहीं काटे जायेंगे।**

## TAMIL

## PAPER – II

**Note :** This paper contains **fifty** (50) multiple-choice questions, each question carrying **two** (2) marks. Attempt **all** of them.

1. தொல்காப்பியத்தை முதன்முதலில் பதிப்பித்தவர்:
   (A) ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (B) வையாபுரிப் பிள்ளை
   (C) உ. வே. சாமிநாதையர் (D) சி. வை. தாமோதரம் பிள்ளை.

2. புறப்பொருளில் அமைந்தது :
   (A) கார் நாற்பது (B) களவழி நாற்பது
   (C) கைந்நிலை (இன்னிலை) (D) திணைமொழி ஐம்பது.

3. திருமுறையில் இடம்பெற்றுள்ள ஆற்றுப்படை :
   (A) புலவராற்றுப் படை (B) கூத்தராற்றுப்படை
   (C) பொருநராற்றுப்படை (D) பெரும்பாணாற்றுப்படை

4. 'சைவசித்தாந்தம்' என்னும் தொடரை முதன்முதலில் ஆண்டவர் :
   (A) திருமூலர் (B) திருஞான சம்பந்தர்
   (C) திருநாவுக்கரசர் (D) மாணிக்கவாசகர்

5. 'பக்தி சாரன்' என்னும் பெயர் கொண்டவர் :
   (A) திருப்பாணாழ்வார் (B) திருமழிசையாழ்வார்
   (C) திருமங்கையாழ்வார் (D) தொண்டரடிப் பொடியாழ்வார்

6. 'நான்மணிக்கடிகை' என்பதில் உள்ள ஈற்றுச் சொல்லின் பொருள் :
   (A) கடிகாரம் (B) மலர் (C) கடிதல் (D) ஓர் அணிகலன்

7. நம்மாழ்வாரைக் கடவுளாகக் கொண்டு பாசுரங்கள் இயற்றியவர் :
   (A) மதுரகவியாழ்வார் (B) பெரியாழ்வார்
   (C) குலசேகராழ்வார் (D) ஆண்டாள்

8. கதைத்தலைவியின் பெயரைக் கொண்டுள்ள காப்பியம் :
   (A) வளையாபதி (B) சிந்தாமணி (C) குண்டலகேசி (D) சூளாமணி.

9. தமிழக அரசால் மணிமண்டபம் அமைத்துச் சிறப்பிக்கப்பட்டவர் :
   (A) இளங்கோ (B) கம்பர் (C) சேக்கிழார் (D) திருத்தக்கதேவர்

10. சூடாமணி நிகண்டின் ஆசிரியர் :
(A) காங்கேயர்
(B) சிதம்பர இரேவணச் சித்தர்
(C) ஆண்டிப் புலவர்
(D) மண்டல புருடர்

11. ஆதி உலாவின் தலைவன் :
(A) சிவபெருமான்
(B) முருகப்பெருமான்
(C) விநாயகப்பெருமான்
(D) திருமால்

12. 'குலோத்துங்கன்' எனும் புனை பெயரில் எழுதும் கவிஞர் :
(A) மு. மேத்தா
(B) ந. பிச்சமூர்த்தி
(C) அப்துல் ரகுமான்
(D) டாக்டர் வா. செ. குழந்தைசாமி

13. அறுசமயக் கொள்கையை உருவாக்கியவர் :
(A) இராமானுஜர்
(B) திருநாவுக்கரசர்
(C) இராமகிருஷ்ண பரமஹம்சர்
(D) ஆதிசங்கரர்

14. ஐந்து சீர்களால் வரும் அடி :
(A) நெடிலடி
(B) அளவடி
(C) சிந்தடி
(D) கழிநெடிலடி

15. 'தீவகம்' என்ற சொல்லின் பொருள் :
(A) ஒளி
(B) நெருப்பு
(C) விளக்கு
(D) சூரியன்

16. தமிழில் 'பண்பாடு' என்ற சொல்லை 'Culture' என்ற சொல்லுக்கு இணையாக பயன்படுத்தியவர் :
(A) டி. கே. சிதம்பரநாத முதலியார்
(B) பம்மல் சம்பந்த முதலியார்
(C) மறைமலையடிகள்
(D) திரு. வி. கலியாண சுந்தரனார்.

17. முதல் தமிழ் அகராதியை எழுதியவர் :
(A) பெர்சிவல்
(B) வீரமாமுனிவர்
(C) ராபர்ட் டி நொபிலி
(D) ஜி. யு. போப்

18. ஞானபீடப் பரிசு பெற்றது :
(A) சித்திரப் பாவை
(B) வேங்கையின் மைந்தன்
(C) பாவை விளக்கு
(D) நெஞ்சின் அலைகள்

19. கவிதை நூலுக்காகச் சாகித்திய அகாதமி விருது பெற்றவர் :
(A) பாரதிதாசன்
(B) கண்ணதாசன்
(C) வைரமுத்து
(D) தமிழன்பன்

20. குமரகுருபரர் இயற்றியது :

(A) நந்திக் கலம்பகம் (B) திருவரங்கக் கலம்பகம்

(C) மதுரைக் கலம்பகம் (D) தில்லைக் கலம்பகம்

21. உறுதிக்கூற்று : 'அரி மருவுசோலை' என்பதில் இடம்பெறுவது கவர்படு பொருள் மொழி ஆகும்.

காரணம் : பொருள் மயக்கத்திற்குக் காரணமாக இத்தொடர் நிற்கிறது.

(A) (உ) சரி, (கா) சரியன்று (B) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(C) (உ) சரியன்று, (கா) சரி (D) (உ) , (கா) இரண்டும் சரி

22. உறுதிக்கூற்று : முதல் திருவந்தாதி தொடர்நிலைச் செய்யுள் என்னும் வகையது.

காரணம் : செய்யுள் அந்தாதி சொற்றொடர் நிலையே.

(A) (உ), (கா) இரண்டும் தவறு. (B) (உ), (கா) இரண்டும் சரி.

(C) (உ), சரியன்று, (கா) சரி. (D) (உ)சரி, (கா) தவறு.

23. உறுதிக்கூற்று : பாரதியார் இயற்றிய ஒரு வகைக் கவிதைக்குச் சீட்டுக்கவி என்று பெயர்.

காரணம் : முடங்கல் போல அக்கவிதை அமைந்துள்ளது.

(A) (உ) சரி, (கா) சரியன்று (B) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(C) (உ) , (கா) இரண்டும் சரி (D) (உ) சரியன்று (கா) சரி

24. உறுதிக்கூற்று : சுப்ரபாதம் எனினும் துயிலெடை எனினும் ஒக்கும்.

காரணம் : தலைவன் துயில்கொள்ளப் பாடப்படும்.

(A) (உ) , (கா) இரண்டும் சரி (B) (உ) தவறு, (கா) சரி

(C) (உ), (கா) இரண்டும் தவறு (D) (உ) சரி, (கா) தவறு

25. உறுதிக்கூற்று : காளமேகப்புலவர் ஆசுகவி எனப் போற்றப்படுகிறார்.

காரணம் : ஆசிரியப்பாக்கள் புனைவதில் அவர் வல்லவர்.

(A) (உ), (கா) இரண்டும் தவறு (B) (உ) சரி, (கா) தவறு

(C) (உ) , (கா) இரண்டும் சரி (D) (உ) தவறு (கா) சரி

26. உறுதிகூற்று : கந்தபுராணம் புராணக்காப்பியம் எனப் போற்றப்படுகிறது.

காரணம் : அந்தாதியால் ஆன புராணம் அது.

(A) (உ) சரி, (கா) சரியன்று (B) (உ) சரியன்று (கா) சரி

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல (D) (உ) , (கா) இரண்டும் சரி

27. உறுதிக்கூற்று : இஸலாமியத் தாயுமானவர் எனப்பட்டவர் குணங்குடி மஸதான்.
காரணம் : தாயுமான சிவபெருமானின் திருவருள் பெற்றவர் அவர்.
(A) (உ) சரியன்று (கா) சரி
(B) (உ) , (கா) இரண்டும் சரி
(C) (உ) சரி, (கா) சரியன்று
(D) (உ), (கா) இரண்டும் சரியல்ல

28. உறுதிக்கூற்று : தொன்னூல் விளக்கம் 'குட்டித்தொல்காப்பியம்' எனக் குறிக்கப்படும்.
காரணம் : தொல்காப்பியத்தை வீரமாமுனிவர் மொழி பெயர்த்துள்ளார்.
(A) (உ) சரி, (கா) சரியன்று
(B) (உ) சரியன்று (கா) சரி
(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல
(D) (உ) , (கா) இரண்டும் சரி

29. உறுதிக்கூற்று : 'ஏடாயிரம் கோடி எழுதாது தன்மனத்து எழுதிப் படித்த விரகன்' எனக் குறிக்கப்படுபவர் வீரராகவ முதலியார்.
காரணம் : பார்வையற்றவராயினும் படிப்பிலும் படைப்பிலும் ஈடுபட்டவர் அவர்.
(A) (உ), (கா) இரண்டும் சரியல்ல
(B) (உ) , (கா) இரண்டும் சரி
(C) (உ) சரி, (கா) சரியன்று
(D) (உ) சரியன்று (கா) சரி

30. பத்துப்பாட்டு விளக்கவெண்பா :
(A) முல்லை, பாண், பொருநர், முருகு
(B) பாண், முல்லை, பொருநர், முருகு
(C) முருகு, பொருநர், பாண், முல்லை
(D) முருகு, பாண், பொருநர், முல்லை

31. வேற்றுமையணியின் வகை :
(A) குணம், பொருள், சாதி, தொழில்
(B) குணம், சாதி, பொருள், தொழில்
(C) தொழில், சாதி, பொருள், குணம்,
(D) தொழில், பொருள், குணம், சாதி

32. முப்பாலில் பொருட்பால் அமைவு :
(A) அரசியல், குடியியல், அங்கவியல்
(B) அரசியல், அங்கவியல், குடியியல்
(C) அங்கவியல், குடியியல், அரசியல்,
(D) குடியியல், அங்கவியல், அரசியல்

33. திருமுறைகளில் தேவார ஆசிரியர் வரிசை :
(A) சம்பந்தர், அப்பர், சுந்தரர்
(B) சுந்தரர், அப்பர், சம்பந்தர்
(C) சம்பந்தர், சுந்தரர், அப்பர்
(D) அப்பர், சுந்தரர், சம்பந்தர்

34. மகளிர்தம் பருவத்துக்கான வரிசை :
(A) மங்கை, பேதை, பெதும்பை
(B) மங்கை, பெதும்பை, பேதை
(C) பேதை, பெதும்பை, மங்கை
(D) பேதை, மங்கை, பெதும்பை

35. பாவேந்தரின் பா உரைப்பது :

(A) பாடாத தேனீ, பசியாத நல்வயிறு, உலவாத் தென்றல்

(B) உலவாத் தென்றல், பாடாத தேனீ, பசியாத நல்வயிறு

(C) பாடாத தேனீ, உலவாத் தென்றல், பசியாத நல்வயிறு

(D) பசியாத நல்வயிறு, உலவாத் தென்றல், பாடாத தேனீ

36. 1994, 95, 96 களில் சாகித்திய அகாதமி விருது பெற்றவர் :

(A) பொன்னீலன், அசோகமித்திரன், பிரபஞ்சன்

(B) பொன்னீலன், பிரபஞ்சன், அசோகமித்திரன்

(C) அசோகமித்திரன், பொன்னீலன், பிரபஞ்சன்

(D) பிரபஞ்சன், அசோகமித்திரன், பொன்னீலன்

37. கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருவன :

(A) கொடிநிலை, வள்ளி, கந்தழி,

(B) கந்தழி, வள்ளி, கொடிநிலை

(C) கொடிநிலை, கந்தழி, வள்ளி

(D) வள்ளி, கந்தழி, கொடிநிலை

38. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வ.சுப. மாணிக்கம் | 1. | பார்த்திபன் கனவு |
| (b) | மு. வரதராசனார் | 2. | பெண்ணின் பெருமை |
| (c) | திரு. வி. க. | 3. | தமிழ்க் காதல் |
| (d) | கல்கி | 4. | தம்பிக்கு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

39. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | முத்தகம் | 1. | பல பாடல்களைத் தொகுப்பது |
| (b) | குளகம் | 2. | காப்பியமாகவும் அந்தாதியாகவும் வருவது |
| (c) | தொகைநிலை | 3. | தனிநின்று முடிவது |
| (d) | தொடர் நிலை | 4. | பல பாட்டு ஒரு வினை கொள்வது. |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

40. பொருத்துக :

| | | |
|---|---|---|
| (a) | பாவிகம் | 1. பலபொருள் தருவது |
| (b) | தன்மை அணி | 2. ஒரு சொல் பலவிடங்களில் வந்து பொருள் தருவது |
| (c) | சிலேடை | 3. எவ்வகை பொருளும் மெய்வகை விளக்கும் |
| (d) | தீவகம் | 4. காப்பியப்பண்பு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

41. பொருத்துக :

| | | |
|---|---|---|
| (a) | நிரல்நிரை | 1. அடிகள் மாறி மாறிப் பொருள் கொள்வது |
| (b) | சுண்ணம் | 2. பொருள் சிறப்புக்குத் தகப்பொருந்துமாறு கொள்ளுதல் |
| (c) | அடிமறி | 3. பொடிப் பொடியாய்ச் சிதறிய சொற்களை ஒட்டுவது |
| (d) | மொழிமாற்று | 4. சொல்வேறு நிலைஇப்பொருள் வேறு நிலையல். |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

42. பொருத்துக :

| | | |
|---|---|---|
| (a) | கிறித்தவக்கம்பர் | 1. மௌனி |
| (b) | தமிழகத்துப் பெர்னாட்ஷா | 2. தமிழ்ர் வால்டர்ஸகாட் |
| (c) | சிறுகதையின் திருமூலர் | 3. அறிஞர் அண்ணா |
| (d) | கல்கி | 4. கிருஷ்ணப்பிள்ளை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

43. பொருத்துக :

| | | |
|---|---|---|
| (a) | பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ | 1. மணிமேகலை |
| (b) | யாமார்க்கும் குடியல்லோம் | 2. பாஞ்சாலி சபதம் |
| (c) | உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே | 3. தேவாரம் |
| (d) | தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் | 4. கம்பராமாயணம் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

44. பொருத்துக :

| | | |
|---|---|---|
| (a) | தும்பை | 1. குறிஞ்சியது புறனே |
| (b) | உழிஞை | 2. முல்லையது புறனே |
| (c) | வஞ்சி | 3. மருதத்துப் புறனே |
| (d) | வெட்சி | 4. நெய்தலது புறனே |

| | a | d | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

பின்வரும் பகுதியைப் படித்துப்பார்த்துத் தொடர்ந்து இடம்பெற்றுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையைச் சுட்டுக.

நாடகம்

இயல், இசை, நாடகம், என்று தமிழ் இலக்கியத்தைப் பாகுபடுத்தி வைத்துள்ளனர். இயலும், இசையும் சேர்ந்து கதையைத் தழுவி வரும் கூத்தே நாடகமாகும். 'கூத்து' என்ற சொல்லே 'நாடகம்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. பரிதிமாற் கலைஞரின் 'நாடகவியல்' அண்மையில் வெளிவந்த நாடக இலக்கண நூலாகும். 'சீதா கல்யாணம்', 'பெரிய புராணம்' பாரத விலாசம்' போன்றவைகள் பல்லோர் அறிந்த நாடகங்களாகும். ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு நடிக்கப்பட்டுள்ளன. 'டம்பாச்சாரி விலாசம்', கலியாண நாடகம்', தாசில்தார் நாடகம், முதலிய சமூக நாடகங்களும் தமிழகத்தில் நடித்துக் காட்டப்பட்டுள்ளன.

சிலப்பதிகாரத்தின், அடியார்க்கு நல்லார் உரையில் பாரதம், அகத்தியம் போன்ற நாடக இலக்கண நூல்கள் இருந்ததாகக் குறிப்பு உள்ளது. ஆனால் இவை கிடைக்கவில்லை. இறையனார் களவியல் உரையிலும் பஞ்ச மரபு, இந்திரகாளியம், போன்ற நாடக நூல்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. இவையும் தற்போது கிடைக்கவில்லை. இராசராச சோழன் காலத்தில் நாடகம் வளர்க்கப்பட்டதாக அறிகிறோம். ஆனால் இக்கால நாடகங்கள் ஏதும் கிடைத்தில. கி. பி. 7ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மகேந்திரவர்ம பல்லவன் வடமொழியில் எழுதிய 'பகவத்துஜீக அங்கதம்' என்ற நாடகம் தற்போது கிடைக்கின்றது. இதுவே இன்று கிடைக்கும் பழமையான நாடகமாகும். நாடகக்கலைஞர்கள் வழி வழியாக நாடகம் நடத்தி வந்திருந்த போதும் அவற்றை எழுதி வைக்கும் பழக்கத்தைக் கொண்டிராததால் தமிழில் பல நாடகங்கள் அழிந்துவிட்டன.

நாடகம் பல நூற்றாண்டுகொளாகத் தமிழகத்தில் நடத்தப்பட்டு வந்திருந்த போதும் கி.பி, 17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளில் தான் அவை புத்துயிர் பெற்றன. அருணாசலக் கவிராயரின் இராம நாடகமும் திரிகூடராசப்பக்கவிராயரின் குறவஞ்சி நாடகமும் பின்னர் எழுந்த பள்ளு நாடகங்களும் இத்தகைய நாடக வளர்ச்சிக்கு உதவின என்று சொல்லலாம். அரசர்களுக்கான நாடகம் 'வேத்தியல் கூத்து' என்றும் பொது மக்களுக்கான நாடகம் 'பொதுவியல் கூத்து' என்றும் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

காசிவிசுவநாத முதலியார் (1806-1871) வேதசமாஜம், பிரம்மசமாஜம், தத்துவ போதினி (இதழ்) போன்றவற்றை நடத்தி வந்தார். சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் வாழ்ந்த ஒரு முதலியார் சிறுவனின் தற்குறித்தனத்தை எடுத்துக் கூறும் வகையில் 'டம்பாச்சாரி விலாசம்' (1867) என்ற நாடகத்தை உருவாக்கினார். இந்நாடகமே முதன்முதலில் மேடையில் நடிக்கப்பெற்ற சமூக நாடகமாகும். தாசில்தார் நாடகமும் இவர் எழுதியதே. இவரைத் தொடர்ந்து திண்டிவனம் ராமசாமிராஜா (1852 - 1897) 'பிரதாபசந்திர விலாசம்' (1882) என்ற நாடகத்தை அரங்கேற்றினார். இதுவே தமிழில் முழுவதும் வசனமாக அமைந்த முதல் நாடகமாகும். 'சித்திராங்கி விலாசம்' (1886), நன்னெறி சத்திய பாஷா அரிச்சந்திர விலாசம் (1890), சோழ விலாசம், அரிச்சந்திர விலாசம் போன்ற நாடகங்கள் அப்பாவு பிள்ளையால் எழுதி அரங்கேற்றப்பட்டன. முதன்முதலில் கருநாடக இந்துஸதானி இசையைத் தமிழ் நாடகங்களில் புகுத்தியவர் இவரே. தொடக்ககால நாடகங்கள் அனைத்தும் சபா, விலாசம், என்ற பெயரில் எழுதப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

தஞ்சாவூரில் மனமோகன நாடகக் கம்பெனியை நடத்தி இக்கம்பெனியின் வழியாக அபிமன்யுவதம், சிறுத்தொண்டர் புராணம், திரௌபதி துகில் உரிவு, கர்ணவதம், போன்ற நாடகங்களை எழுதி அரங்கேற்றிய 'தமிழ் நாடகத்தாத்தா' என்றழைக்கப்படும் நவாப் கோவிந்தசாமி ராவ் குறிப்பிடத்தக்கவர். கும்பகோணம் நடேசதீட்சிதர், திருக்கல்யாணராமையர் நாடகக்குழுவை நடத்தி நாடகத்தில் புதுமையைச் செய்தவர். இதனைத் தொடர்ந்து பலவகையான நாட்டுப்புறக்கதைகள், சாதிபற்றிய கதைகள், வரலாற்றுக் கதைகள் நாடகங்களாக அரங்கேற்றம் செய்யப்பட்டன. பாரத, இராமயணக் கதைகள் தமிழ் நாடக வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன.

45. இறையனார் களவியல் உறையில் இடம்பெறுபவை :

1. இந்திரகாளியம் 2. அகத்தியர் குழம்பு

3. பஞ்ச மரபு 4. பாரதவிலாசம்

கீழே தரப்பெற்றுள்ள விடைதெரி குறிப்பிலிருந்து விடையைக் கண்டுபிடிக்கவும்.

(A) 1 ம், 4 ம் சரி (B) 1ம், 3ம், 4ம் சரி

(C) 2ம், 3ம் சரி (D) 1ம், 3ம் சரி

46. நவாப் கோவிந்தசாமிராவ் அரங்கேற்றியவை :

1. சித்திராங்கி விலாசம் 2. கர்ணவதம்

3. திரௌபதி துகில் உரிவு 4. அபிமன்யு வதம்

கீழே தரப்பெற்றுள்ள விடைதெரி குறிப்பிலிருந்து விடையைக் கண்டுபிடிக்கவும்.

(A) 2ம், 3ம், 4ம் சரி (B) 1ம், 4ம் சரி

(C) 2ம், 4ம் சரி (D) 1ம், 2ம், 4ம் சரி

47. உறுதிக்கூற்று : சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையில் நாடகநூல்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன.

காரணம் : பரிதிமாற் கலைஞரின் நாடகவியல் பற்றி அடியார்க்கு நல்லார் குறிக்க விழைந்துள்ளார்.

(A) (உ), (கா) இரண்டும் சரி

(B) (உ) சரியன்று, (கா) சரி

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ) சரி, (கா) சரியல்ல

48. பொருத்துக :

(a) அப்பாவுபிள்ளை 1. இராமநாடகம்

(b) கோவிந்தசாமிராவ் 2. பகவத்துஜீக அங்கதம்

(c) அருணாசலக் கவிராயர் 3. சோழவிலாசம்

(d) மகேந்திரவர்ம பல்லவன் 4. சிறுத்தொண்டர் புராணம்

சரியான விடையைத் தெரிவு செய்க :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

49. பொருத்துக :

| | |
|---|---|
| (a) திரிகூடராசப்பர் | 1. பிரம்மசமாஜம் |
| (b) காசிவிசுவநாத முதலியார் | 2. பிரதாபசந்திரவிலாசம் |
| (c) இராமசாமி ராஜா | 3. திருக்கல்யாணராமையர் நாடகக் குழு |
| (d) நடேச தீட்சிதர் | 4. குறவஞ்சி |

சரியான விடையைத் தெரிவு செய்க :

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

50. உறுதிக்கூற்று : அரசர்களுக்கான நாடகம் 'வேத்தியல் கூத்து' எனப் பெற்றது.

காரணம் : பொதுமக்களுக்குப் பொதுவியல் கூத்து அமைந்ததால் அரசர்களுக்குத் தனியே கூத்து நிகழ்த்தப் பெற்றது.

(A) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(B) (உ) சரி, (கா) சரியன்று

(C) (உ), (கா) இரண்டும் சரி

(D) (உ) சரியன்று, (கா) சரி

- o O o -

**Space For Rough Work**